முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1192

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.01.2023**, செவ்வாய்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா வாழ்க
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா வாழ்க
தான தர்மத்தின் பலத்தின் மூலம்
தரணி எல்லாம் தர்மபலம் பெருக்கி
2. பெருக்கியே மக்களிடை சன்மார்க்கம் என்கின்ற
பிசகில்லாத உயர்மார்க்கத்தை கொண்டு
கருத்தாக உலகோரை தேற்றி
கலியுகத்தில் ஞான ஆட்சி கொண்டு வரும் வண்ணம்
3. வண்ணமுடன் உயர்வாக சேவையாற்றும்
வள்ளலே வாழுகின்ற ஞானியே
நன்னயமாய் சுப்ரமணியர் யாம் உமக்கு
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 19 ம் நாள் 03.01.2023, செவ்வாய்கிழமை)
4. ஆசிதனில் அரங்கன் பலம் இந்த உலகம் அறிய
ஆளுமைகளெல்லாம் ஞான வழிகளாக மாறி
பேசிடுவேன் தர்ம லோக ஞானஆட்சி
பிசகின்றி பேருலகம் கண்டடைய
5. அடையவே அரங்கன் தயவாலே
அனைத்தும் மாற்றங்காணும்
ஆற்றல்பெருக அகிலத்தார் அனைவரும்
தடையற அரங்கன் குடில் நோக்கி
தட்டாது வந்து ஞான உபதேசம் ஏற்று
6. ஏற்றுமே சரவணச்சுடரேற்றி
இனிதே இயன்ற தர்மம் செய்துகொண்டு
ஆற்றல்பட ஞானிகள் பூஜையோடு
அரங்கன் திருவடி அகலாது தொடர்ந்துவர
7. வருகவே உலகில் மாற்றம்
வல்லமைபட ஞான ஆட்சிக்காலமாக
பெருமைபட அரங்கனால் நடந்தேறும்
பிசகின்றி இந்த உலகம் பாதுகாப்புமிக்க ஞான லோகமாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–